உ
சிவமயம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும்
இல. 531, ஒட்டங்குளம், பொன்னகரை வசிப்பிடமாகவும் கொண்ட



அமரர்

# செல்லப்பா தாமோதரம்பிள்ளை

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக வெளியிடப்பெற்ற

# நினைவு அஞ்சலி மலர்

**06.10.2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும்

இல.531, ஒட்டங்குளம், பொன்னகரை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் செல்லப்பா தாமோதரம்பிள்ளை

## அவர்களின் முதலாம் ஆண்டு
## நினைவாக வெளியிடப் பெற்ற

# நினைவு அஞ்சலி மலர்

## 06.10.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எம் அருமைத் தெய்வமே !

அன்பின் திருவுருவே

பண்பில் பெருமகனே

அமைதியே உருவான அப்பாவே

வாழும் வழிகாட்டி

பாசமாய் வளர்த்த எம் குலவிளக்கே

நீங்கள்

எம் வம்ச விருட்சத்தின் ஒளிவிளக்காக

சுடர்விட்டுப் பிரகாசிக்க

இந்த நினைவு அஞ்சலி மலரைக்

காணிக்கையாக்கி கைகூப்பி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி, ஓம்சாந்தி, ஓம்சாந்தி**



**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## எமது அன்புத் தந்தை

மலர்வு:
14
-
04
-
1930



உதிர்வு
16
-
10
-
2017

# அமரர் செல்லப்பா தாமோதரம்பிள்ளை
(வெள்ளையர்)

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஏவிளம்பி வருடமதின்
மகாலய பட்ச புரட்டாதி மாதமதில்
தேய் பிறையாம் திங்களிலே - அண்ணல்
தாமோதரம்பிள்ளை என்பார் இறையடி சேர்ந்த அன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினும் அருளில் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்றுமுதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருபல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும்
வாழ மறை வாழப்
பான்மை தரு செய்யதமிழ்
பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர
மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி
அஞ்சலி செய்கிற்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடற் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா தாமோதரம்பிள்ளை

## அமரர் [redacted] அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கை வளநாடு
புகழ் பொங்கும் இயற்கை வளமுடனே
திகழ்ந்து சிறந்திடுமாம் – அதன்
வடபால் அமைந்திட்ட குடாநாட்டின்
வடமேற்கில் அணி சேர்க்கும் ஏழு தீவுகளில்
நெடுந்தீவே பெரிதென அறிந்திடுவீர்.
ஏழு ஐந்து மைல் சுற்றளவு
எழுகின்ற சூரியனின் சிவப்பழகு.
பாழ் வினைகள் அற்ற தொரு பசுந்தீவு
பண்பட்ட மக்கள் நிறை நெடுந்தீவு

இந்துக் கோவில்கள் இன்னருள் கூட்டும்
இடையிடை கிறீஸ்த்தவத் தலங்களும் காட்டும்
அன்பும் அறனும் தழைத்து மேலாங்கும்
அழகிய தீவே நெடுந்தீவாகும்

எங்கும் நிறைந்திடும் பனையும் தென்னையும்
எழிலுடன் வளர்ந்த ஆலும் அரசும்
வற்றாத நோய் தீர்க்கும்
கற்றாளைப் பரப்பும்
ஈச்சம் பற்றைகளுடன்
இலங்கிடும் பூவரசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுளைக் கூட்டும் மூலிகை வளமுடன்
வேம்பும் சேர்ந்து வெற்றிடம் நிரப்பும்
இயற்கை வளம் நிறைந்த
இனிய தீவே நெடுந்தீவாகும்

வெடியரசன், மீகாமன் கோட்டைகள் தன்னுடன்
வேலியென கற்களால் உயர்ந்த பகிர்களும்
அணியணியாய் பரந்து நிற்கும் குதிரைகளின் கூட்டமும்
ஆயிரம் தூண் கொண்ட அதற்கான லாயமும்
ஆட்டு மந்தையும், ஆவின் நிரைகளும்
கூட்டும் எழிலுடன் குலவிடும் நெடுந்தீவாம்

நெல், வரகு, சாமி, இறுங்குடன் சோழன்
கொள்ளு, தினை, குரக்கன், வெங்காயமுடன் மிளகாய் என
விளையும் வள பூமியுடன்
கல்விச் சாலைகளும், கற்றோரும் நிறை தீவாம் நெடுந்தீவு

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும்
நன்கு நிறை தீவு
வந்தாரை வரவேற்கும்
வரலாற்றில் உயர் தீவு
ஆணும் பெண்ணும் சமமென மதிக்கும்
அருங்குணம் கொண்ட அழகிய தீவே நெடுந்தீவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரைப் பிள்ளைகள் பேணிக் காப்பதில்
பெருமை சேர் தீவு
நச்சுணவற்ற உச்சப் பயன் தரும்
பனையின் பயனால்
நீண்ட ஆயுள்
நிலை பெறும் தீவே நெடுந்தீவாகும்.

**இத்தீவின் கண்ணே பிறந்து வளர்ந்த**
**சாலச் சிறந்த எங்கள் தந்தையான**
**காலஞ் சென்ற செல்லப்பா தாமோதரம்பிள்ளை அவர்களின்**
**முன்னோர் பற்றியும், பின்னே இணைந்த**
**உறவின் தன்மையும், தடம் விட்டு**
**இடம் மாறிய தன்மை பற்றிய உண்மை**
**விபரத்தை உற்று நோக்கிடுவோம்**

ஏட்டின் துணையுடன்
நாட்டு வைத்தியம் புரிந்து
நன்கு சிறப்புற்றிருந்த
பரியாரி பரம்பரை வைத்திய நாதர் வழி வந்தோர்
இவர் வழி வந்த மகனெனப் பிறந்தவர் நாகநாதர்
இவரின் மகனாய் இராமநாதர்
இராமநாதரின் மகனாய் ஐயம்பிள்ளையும்
அவரின் மகனாய் பிறந்த வைத்திய நாதர்
வாழ்வில் இணைந்த கோமதி தன்னுடன்
வாழ்ந்த வாழ்வின் பயனாய்
எட்டுப் பிள்ளைகள் ஏற்றமாய்ப் பெற்றனர்
கொழுவாணி கூட்டமென ஆகியே வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவதாய்ப் பிறந்த
நல்லதொரு செல்லப்பாவிற்கு
திருமணம் புரிய பெண்ணைத்
தேடிய வேளையில்
தனிநாயக முதலியுடன்
ஏரம்ப முதலி வழி வந்த
கணபதி என்கின்ற
கனவான் தன்னுடன் இணைந்து
வயிரவிப்பிள்ளை என்பாள்
பெற்றெடுத்த நற் கொழுந்தாய்
நாகமுத்தென்னும் நல்லார் தன்னை
திருமணம் புரிய
வந்து பிறந்தனர் எட்டு நன் மக்கள்

தையல்முத்தெனும் மூத்தாள் தன்னுடன்
அடுத்ததாக சின்னத்தங்கமும்
அவரின் பின்னே அன்னம்மாவும்
பத்தினிப்பிள்ளையும் வந்து பிறந்தனர்
கவலையால் வாடினர் கணவனும் மனைவியும்
நான்கு பிள்ளைகள் பெற்றும்
ஆண் மகவின்றிப் போன கவலையில்
போற்றி வணங்கும் ஐயனார் கோவில் சென்று
ஏற்றி வணங்கி அழுது புலம்பி
ஆண் மகவொன்று அருளென வேண்டினர்
அடுத்ததாக அவதரித்தார் அம்பலவாணர்
அவரின் பின்னே மீனாட்சிப்பிள்ளை வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பின் ஏழாவது
எழில் மிகும் மகனாய் வந்து பிறந்தார்
தாமோதரம்பிள்ளை (வெள்ளையர்) என்பார்
இவர் பிறந்த வேளை நன்கு அமைய
சிறந்த வாழ்வு அமையப் பெற்றனர்
ஏழு வருட இடைவெளி பின்னால்
கமலம் பிறந்தாள் கற்பக தருவாய்
இவர்களுக்கெல்லாம் இல்லற வாழ்வு
இனிதாய் அமைய வைத்தனர் பெற்றோர்.

தாய் மாமனான சண்முகமும் மாமியும்
இணைந்து பெற்ற விசாலாட்சி எனும் நல்லாள் தன்னை
தாமோதரம்பிள்ளைக்கு
மணம் புரிவித்து மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்
விசாலாட்சி என்ற சின்னம்மாவின்
உறவின் வழிமுறை அறிந்தே தெளிவோம்

மூத்த அண்ணனாய் மூட்டார் என்னும்
பசுபதி தன்னுடன் இராசம்மா
எனப்படும் பாசமுள்ள அக்காவும்
சின்னம்மா நலத்தினை என்றுமே நாடிய
நாகலிங்கண்ணரும் தங்கையாய்
கற்பகம் தானும் சுற்றமாய் ஆகினர்
நெழுவினிப் பிள்ளையார் அருளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோதரம்பிள்ளை எனப்படும் வெள்ளையரும்
விசாலாட்சி என்கின்ற சின்னம்மாவும்
இணைந்து வாழ்ந்த
இல்லற வாழ்வின் பயனாய்
சியாய்ந்தறை மண்ணில்
உயரப் புலத்து ஐயனார் அருளால்
எட்டுப் பிள்ளைகள் இன்பமாய்ப் பெற்றனர்.

தனலட்சுமி எனப்படும் சந்திராதானும்
மூத்த மகளாய் வந்து பிறந்திட
வாழ்வின் பயனை வளமுடன் உணர்ந்தனர்
அடுத்துப் பிறந்த சிவபாதசுந்தரம்
ஆற்றலில் வல்ல அழகனாய்த் திகழ
பெரு மகிழ்வுற்றுப் பேணி வளர்த்தனர்

இவர்களைத் தொடர்ந்து கிருபராணியும்
தர்மசீலனும், இன்பராணியும், தவராசாவும்
வந்து பிறக்க இன்ப வாழ்வில் இணைந்து திளைத்தனர்
இவர்களின் பின்னே
பிறந்த யோகேஸ்வரனும்
எட்டு மாதத்தில் இறையடி சேர
பெருந்துயர் உற்று வருந்தி வாழ்கையில்
வந்து பிறந்தார் புவனேஸ்வரராசா
வருத்தம் மறைய மகிழ்வாய் வாழ்ந்தனர்
கடைசிப் பிள்ளையாய் வந்து பிறந்ததால்
தம்பி எனும் பெயர் நின்று நிலைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள்
வாழ்ந்த நாளில் 1961ம் ஆண்டில்
வன்னி மண்ணின் வளமது அறிந்து
வன்னி சென்று நெற் செய்கை பண்ண
உளமதில் ஆசை கொண்டதுமே
உரமுடன் உடனே செயற்பட்டார்
அரசிடம் அதற்கு விண்ணப்பம் செய்ய
அரசினர் காணியும் வழங்கினராம்
குடியமர்ந்திட இரண்டு ஏக்கரும்
நெல் பயிரிட மூன்று ஏக்கரும்
வவுனிக்குளப் பகுதியில் அமைந்த
ஒட்டாங்குளத்தில் கிடைத்தது காணி
காட்டினை வெட்டி களனியாக்கினர்
வீட்டினை அமைத்து வேலியும் அடைத்தனர்
யானைத் தொல்லையும், நுளம்பின் பெருக்கமும்
மலேரியாத் தாக்கமும் மழையின் வெள்ளமும்
இத்தனை இடர்கள் எதிர் கொண்ட போதும்
அத்தனை துயரிலும் ஆற்றலை வளர்த்தார்
திட்டக் குழுக்களின் செயல்களில் இணைந்தார்
தீர்மானங்கள் நிறைவுபெற திடமாய் உழைத்தார்.

பொன்னாய் விளைந்தது நெல்லின் மணிகள்
பூரித்து மகிழ்ந்துமே ஊரினில் சிறந்தார்
மக்களின் படிப்பு அழிந்திடாவண்ணம்
மனைவி மக்களை அழைத்திடவில்லை
தனித்துமே வந்து
தரத்தினில் சிறந்தார்
குணத்தின் சிறப்பிலும் கொள்கையின் பிடிப்பிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளமில்லாத வெள்ளைச் சிரிப்பிலும்
உள்ளத்தை அள்ளும் வெள்ளை உடையிலும்
அழகின் சிறப்பாய் அமைந்த உருவாய்
திகழ்ந்ததனாலே
வெள்ளையர் என்ற காரணப் பெயரை
இட்டனர் ஊரவர் ஏற்றமாய் அமைந்தது.

அப்படியாக வாழும் நாளில்
வன்னி மண்ணின் வளமது நுகர்ந்து
அன்னவர் மகிழ்வுற ஆழ்ந்த காலையில்
பதினாறு வயதினில் சிவபாதசுந்தரம் என்பார்
மாரடைப்பால் இறையடி சேர
மாளாத் துயரில் மறுகித் துடித்தனராயினும்
கால ஓட்டத்தால் கவலைகள் துறந்தனர்

மக்களுக்கெல்லாம் நற்துணை நாடி
மணம் புரிந்திடும் வேளையில் மருமக்களாக
றஞ்சன், இறையடி சேர்ந்த சற்குணபாலன்
தன்னுடன் ஜசிந்தி, சுசீந்திரன் வந்து
அமைந்திட மகிழ்ந்திடும் நாளில்
இல்லற வாழ்வில் இனிதாய்
இணைந்து வாழ்ந்த மனைவி
விசாலாட்சி மாரடைப்பினால்
விண்ணுலகெய்த இல்லற வாழ்வின் இனிமை குலைந்தது
பிறப்பொன்றுண்டேல் இறப்பும் உண்டு
இது இயற்கையின் நியதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால ஓட்டத்தில் கவலைகள் மறையும்
ஞாலம் கற்பிக்கும் பாடமும் தொடரும்
காலப் போக்கில் கவலை குறைய
மனைவியின் ஆசையை நிறைவேற்றும்
கடமையை நினைத்தார்
தவராசாவிற்கும், புவனேஸ்வரராசா
எனப்படும் தம்பிக்கும் திருமணம்
செய்யமுன் மனைவி இறந்ததால்
நன் மருமக்கள் தேடி புவனேஸ்வரி,
பிரியதர்சினி என்போரை மருமக்களாக
அடையவும் செய்தார்.

பூரித்து மகிழ்ந்து வாழ்ந்திருக்கும் நாளில்
பேரப்பிள்ளைகளாய் அன்ன, லீசா, லிண்டாவுடன்
சகிதா, ரஜீபன், கவிதா உட்பட
ஜனனி, ஜதீசன் ஆகியோர் தன்னுடன்
ரினோவும், விதுசன், விதுசா என்போருடன்
அருணஜா, அருட்குமரன், அருளாளன்
வந்து பிறந்தனர்.
இல்லற உறவில் இணைந்த பேரரின்
துணைவராய் ரமேஸ், றூபன் உட்பட
பிரிதிகாவும் வந்து இணைந்தனர்.
பூட்டப் பிள்ளைகளாய் ஜஸ்வின், சற்றின்
சொப்பியா, இஷான், சயிரா
வந்து பிறந்திட வாழ்வின் பயனை
அடைந்ததாய் உணர்ந்தார்
அவர்களின் அன்பில் மகிழ்ந்துமே வாழ்ந்தார்
வாழ்வின் எல்லை எண்பத்ஏழன ஆனதால்
இறையடி சேர்ந்தவர் சிறந்திட வாழ்த்துவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் கடன்கள்

நமது தாய் தந்தையர் நம்மைப் பெற்றெடுத்து இகலோக நன்மைக்காகவும் பரலோக நன்மைக்காகவும் வளர்க்கின்றனர். புத்திரன் இல்லாதவர்களுக்கு நற்கதி இல்லை என்றும் அவர்கள் புத் என்ற நரகத்தைச் சென்றடைவர் என்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்திய எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகள் அவர்கள் உயிருடன் இருக்கும் போதும் இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக் கிரியைகளின் பலனைச் சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன் தராது என்பது கௌசிகர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாகும்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை "தென்புலத்தார்" என முதலில் கூறியுள்ளார்.பிதிர்கடன் செய்தோர் பெரும் பேறுகளும் சித்திகளும் பெறுவதுடன் சிவ அருளுக்கு ஆளாவர் பிதிர்கடன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியவராவர் பிதிரர் வருந்தினால் பெருந்தீமைகள் நேரும்

இறந்த பின் எமது தாய் தந்தையர்கள் வேறு உலகம் செல்வதால் அவர்கள் தமக்கு தேவையான உணவையும் நீரையும் தேடிக் கொள்ள முடியாது ஆதலால் அவர்கள் பிறர்கையை நம்பியே எதிர்பாக்கிறார்கள் பசியாலும் தாகத்தாலும் வாடுகின்ற எமது பெற்றோர்களுக்கு விதிமுறை தவறாமல் குறிப்பிட்ட காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களை கூறி நாம் செய்யும் சிரார்த்தம் தர்ப்பணம் (எள்ளும் தண்ணீரும் இறைத்தல்) என்பன அவர்களிடம் போய்ச்சேரும்

முறை தவறிச்செய்தாலும் செய்யாமல் இருந்தாலும் அவர்கள் பசியோடு வாடுவர் அப்போது கோபம் உண்டாவது இயற்கை எனவே இயல்பான அன்பை விட்டு சாபம் கொடுப்பார்கள் அதனால் தான் அவர்களுக்குச் சாபாயதர்கள் என்று பெயர் (சாபத்தை ஆயுதமாக உடையவர்கள்) வழங்குகிறது அவர்கள் வயிறு நிறைந்து மனம் குளிர்ந்தால் பூரணமாக ஆசீர்வாதம் செய்வர் பிதிர்கள் மனம் மகிழ்ந்தால் புத்திரப்பேறு செல்வம் ஆரோக்கியம் கல்வி கீர்த்தி முதலிய சகல சம்பத்துக்களும் உண்டாகும்

குழந்தைப் பருவத்திலே உணவுதேடி உண்ண சிசுவிற்கு சக்தி இல்லை பெற்றோர் பசியறிந்து உணவூட்டி நோயுற்றால் மருந்தூட்டி தமதுடலையும் கவனிக்கமால் காக்கின்றனர் அதேபோல் உடலை விட்டு ஜீவன் செல்லுமிடத்தில் தன் உணவைத்தேட முடியாமல் தவிக்கின்றது நம்மை இளமையில் காத்ததற்கு நன்றிபாராட்டவாவது ஈமக்கடன்களை நன்கு செய்ய வேண்டும் என்று தர்மபாசம் நம்மைக் கட்டுப்படுத்துகின்றது ஜீவ ன் ஓராண்டில் யமனிடம் கொண்டு போகப்படும்

**எள்ளும் தர்ப்பையும்**

யஜ்ஞ வராக மூர்த்தியாகத் தோன்றிய மஹாவிஷ்ணுவின் மனத்திலிருந்து எள்ளும் பிராணனிலிருந்து நீரின் சாரமான தர்ப்பையும் தோன்றின பகவான் விஷ்ணு அசுரர் கலத்திற்கு அந்தகன் அவர் பெயரைக் கூறினாலே அரக்கர் பயந்தோடுவர் ஆதலினால் சிராத்த காலத்தில் சிராத்த சம்ரசஷக விஸ்ணுவை வரிக்கின்றோம். அவரிடம் உண்டான எள்ளையும் தர்ப்பையையும் உபயோகித்தால் அசுரர் கிட்ட வரமாட்டார். ஆதலால் சிராரத்தம், தர்ப்பணம் செய்யும் இடங்களிலெல்லாம் எள்ளைத் தூவுகிறோம். தர்ப்பை பவித்திரமானது என்று சுருதி கூறுகிறது. தர்ப்பை பகைவரை விரட்டக்கூடிய அம்பு ஆகும். தர்ப்பை இல்லாத கர்மா இல்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திசையின் முக்கியத்துவம்**

தேவர், பித்ருக்கள், மனுஷ்யர், ருத்ரர் ஆகியவர்கள் ஒவ்வொரு திசையைத் தமக்கென ஏற்படுத்திக் கொண்டனர். கிழக்கு தேவர்கட்கும் மேற்கு மனிதர்கட்கும் தெற்கு பித்ருக்களுக்கும் வடக்கு ருத்தர்களுக்கும் என வேதம் கூறுகிறது. பித்ரு லோகத்துக்கு தலைவனான யமதர்மராயன் தென் திசையிலே இருக்கிறார். ஆதலால் பித்ருகர்மாக்கள் எல்லாவற்றையும் தெற்கு முகமாகச் செய்ய வேண்டும். சிரார்த்தத்திற்கு தெற்கு நுனியாகத் தர்ப்பைகளைப் போட்டு அதன் மீது பித்ருக்களை ஆவாஹனம் செய்ய வேண்டும்

**சிராத்தத்தின் தேவை**

ஸபிண்டீகரணமாவது இறந்தவரை அவரது தந்தை, பாட்டன் முதலியவர்களுடன் பிண்டமளித்துச் சேர்த்துவிடும் கிரிகையாகும் சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்வது எனவே இவற்றைச் சிறந்த முறையிலே செய்ய வேண்டும். மறுவுலகில் ஜீவனுக்கு வேண்டிய வஸ்திரம், குடை, தீர்த்த பாத்திரம், பாதுகை, படுக்கை முதலிய சகல பொருட்களையும் தானம் செய்ய வேண்டும். அவை இறந்தவரக்கு கிடைக்கும் இன்பமளிக்கும்.

பசி, தாகம் அடங்குவதற்காக நித்திய சிரார்த்தம் செய்வதுண்டு இறந்த திதியில் 12 மாசியங்களும் 12 சோதகும்பமும் இடையில் ஊனமாசியம் முதலியனவும் (16) செய்து முடிவில் ஆப்திகம் செய்வது புத்திரர் கடமை.

**ஆன்மாவின் பயணம்.**

ஜீவன் வழியில் கிங்ரகருடன் 16 இடங்களில்தங்குகின்றது புத்திரன் செய்யும் சிரார்த்தம் அந்த லோகத்துக்கு ஏற்ற உணவாக ஜீவனுக்கு அளிக்கப்படும். அதற்காகத்தான் சுடு காட்டில் இருந்து திரும்பியதும் நக்ந சிரார்த்தம் செய்து வஸ்திரம், தீபம், தீர்த்தப் பாத்திரம் முதலியன தானம் கொடுக்கப்படுகிறது. பிண்டத்தில் பாதிப்பகுதி பிரேதவுடலை வளர்க்கும். கால் பங்கு யம கிங்கரர்களுக்குத் திருப்தி தரும். அதனால் அவர்கள் ஜீவனை இம்சிக்கமாட்டார்கள்.மற்றொரு கால் பங்கு பிண்ட தானம் செய்பவருக்கு நன்மை உண்டு பண்ணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபரக் கிரியைகள் வகை:-**

இவை தகனக் கிரியை, அத்தி சஞ்சயனம், அந்தியேட்டி , ஏகோதிட்டம் , சபிண்டீகரணம், மாசிதம், சிரார்த்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தர கிரியை, சிரார்த்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயாவர். அவர்களுக்குரிய உத்தர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்களின் சிரார்த்தம் குரு பூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

**மரணக் கிரியைகள்:-**

சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக் கிரியைகளில் மூன்று பகுதிகள் உள. அவையாவன பேரிகையடித்தல், உடற் சுத்தி, ஆன்ம சுத்தி என்பனவாகும்.

**பேரிகையடித்தல்:-**

ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி மேளத்திலே பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும் போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும் எனவும், பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினங்களுக்கும் ஐஸ்வரியம் உண்டாகவும் வேண்டும் எனவும் மிருகம் பறவை முதலி உயிரினங்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமெனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன். சிவபெருமான் இதை இரட்சிக்க என்பதாகும். (இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்)

உடற் சுத்தி:-

சிவாச்சாரியார் பந்தலின் நடுவில் சிவ கும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள், நீர், சிவகும்ப நீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து புத்தாடை புனைந்து நீறு சாத்தி பூச் சூடி, பிரணவமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியர் பஞ்ச சுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து அட்டதிக்குத் தேவர்களையும், சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தினைப் பெறுவார். கும்பத்திலிருந்த சிவனை உடலின் மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வார். இதயத்தில் சிவனை ஆவாஹனம் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியர் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களைத் தீர்க்க ஆகுதி செய்து அவ்வுடலுக்கும் தனக்கும் நாடிச் சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இதயத்திற்குக் கொண்டு வந்து உருத்திரனை தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

**சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்:-**

பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகிறது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காகப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப்பெறும்.

**சுடலை சேர்த்தல்:-**

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்டதிக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலெ நெற்பொரி தூவப்படும். (சைவாசாரமுள்ள ஒருவரே இதனைச் செய்யத்தக்கவராவார்) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும் கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நான்கு முழு நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர் பெறும். இச் சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீயிடல்:-**

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்குத் தெளித்து குடத்தை முன்பாக நிலத்தில் போட்டு சிவாக்கினியை விறகின் கண் இட்டு எரியச் செய்வர். கொள்ளி வைத்தவர் பின் நீர்க் கரையில் நீராடி வீடு செல்வார். தீ இடும் பொழுது "அக்கினி தேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக்கொள்ளும்" என நினைத்துக் கொண்டே தீயிட வேண்டும்.

**அத்தி சஞ்சயனம்:-**

அத்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி - எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல் இது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளை சாம்பலுடன் எடுத்து பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு சென்று புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்யலாம். அத்தியை புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள், சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாம்.

**நக்ன தானம்:-**

இது தகனக் கிரியை முடிந்த பின் இறந்தவரின் பசி, தாகம் முலியவற்றை நீக்கும் பொருட்டு குடும்பத்தினரால் ஆசாரியருக்கு ஆடை, அரிசி முதலியவற்றை தானமாகக் கொடுத்தல்.

**அந்தியேட்டி:-**

இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய கடைசி நாள், இட்டி - யாகம் இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டான த்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும் - புண்ணிய நீர்க்கரையில் நிகழும் கிரியை இது. இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடான பூசை(பாசஷாண பூசை)**

ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை, இப்பூசையினாலும் இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவ பதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

**ஏகோதிட்டம்:-**

ஆசௌசம் நீங்கிய அடுத்த நாள் இற்தவருடைய ஆன்ம சுத்திக்காகவும், நற்கதியடையும் பொருட்டும் செய்யப்படும் கிரியை. இக்கிரியையில் இருக்கும் ஆசாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவு பொருட்களைத் தானமாகக் கொடுத்து ஒரு வருடம் முடியும் வரை எதிர்ப்படாமல் இருக்கச் செய்தல். தானமாகக் கொடுக்க வேண்டிய பொருட்கள் உணவுப் பொருட்கள், உடை, திருநீற்றுப் பை, செபமாலை, குடை, மிதியடி, பொன் முதலியனவையாகும்.

**சபிண்டீகரணம்:-**

ஏகோதிட்டத்திற்கு அடுத்த நாளிலே பிதிர் தேவர்களோடு இறந்தவரைச் சேர்த்தற்கு நடைபெறும் கிரியை, சபீண்டிகரணத்தால் ஆன்மா சுத்தி பெற்று சிவலோகம் சேரும் இக் கிரியை பிண்டமிட்டு செய்வதனால் இது சபீண்டிகரணம் எனப்படும். பிண்டத்திற்குரிய பொருட்கள் அரிசி, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆகியனவாகும். பிதிரர்க்குச் செய்யும் இக் கிரியையைப் பிதிர் தேவர்கள் பெற்று, இறந்தவர்க்கும் அவரது தலை முறை முன்னோர்களுக்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.

**மாசிகங்கள்:-**

இறந்த நாள் முதல் இருபத்தேழாம் நாளில் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்படுவது ஊன மாசிகமாகும். நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்துக்குள் செய்யப்படுவது திரைபட்ச மாசிகமாகும்.நூற்றெழுவது நாளின் மேல் பத்து நாட்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுவது ஊனசஷான் மாசிகமாகும். முந்நூற்று நாற்பத்தைந்தாம் நாளின் மேல் பதினைந்து நாட்களுக்குள் ஆப்திகத்திற்கு முன் செய்யப்படுவது ஊனாப்திக மாசிகமாகும்.

இந்த நான்கு மாசிகங்களும் இரண்டாம் மாதம் முதற் பன்னிரண்டாம் மாதம் வரை இறந்த திதிகளிற் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுக்குமாக பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டும்.

ஊன மாசிகம், திரைபட்ச மாசிகம், ஊனசஷாண் மாசிகம், ஊனாப்திக மாசிகம் என்னும் நான்கு மாசிகங்களையும் வாராதி தோசஷங்கள் இல்லாத நாட்களில் செய்தல் நன்று.

**செய்யத்தகாத நாட்கள்:-**

திரிதியை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும், வெள்ளிக்கிழமையிலும், கேட்டை,பூரம், பூரட்டாதி, ஆயிலியம், மூலம், கார்த்திகை முதலான நட்சத்திரங்களிலும், திரிபுஷ்கர யோகம், துவிபுஷ்கர யோகம் என்பவற்றிலும் செய்தலாகாது.

திரிபுஷ்கர யோகமாவது துதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், புரட்டாதி என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுஷ்கர யோகமாகும்.

துவிபுஷ்கர யோகமாவது இம் மூன்றுள் இரண்டு கூடுவதாகும். மற்றைய பதினொரு மாசிகங்களையும் கால தோஷம் பாராது அவ்வத்திதிகளில் செய்யலாம்.

சிரார்த்தம்:-

சிரத்தையோடு செய்யப்படுவது சிரார்த்தம் எனப்படும். சிரத்தையானது பற்று, அன்பு, இறந்தவர்களில் அன்பும், பற்றும் உடையவர்களினாலே தான் இக்கிரியை செய்யப்படவேண்டும். இக்கிரியையின் உயிர் நிலை அன்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரார்த்தம் பிதிர் கருமம் என்னும் பொருள் உடையதாய் எல்லா பிதிரி கருமங்களையும் குறிப்பது ஆயினும் இது நம் நாட்டில் ஆட்டைத் திவசம், திவசம் என்பவற்றையே குறிப்பிடுகின்றது. திவசம் திதி எனப்படும்.

**ஆட்டைத் திவசம்:-**

ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின் செய்யும் சிரார்த்தம் ஆப்திகம் அல்லது ஆட்டைத் திவசம் எனவும் அதனையடுத்து ஆண்டுதோறும் அதே திதியில் செய்யப்படுவதை வருட சிரார்த்தம் அல்லது திவசம் எனவும் கூறப்படும்.

**நைமித்திய சிரார்த்தம்:-**

பிதா மாதா முதலாயினோர் இறந்த தினமும் திதியும் வருடந்தோறும் வரும் பொழுது விசுவாசத்தோடு விதிப்படி செய்வது நைமித்திய சிரார்த்தம் எனப்படும். எந்த திதியில் இறந்தாரோ அத்திதியில் சிரார்த்தம் செய்தல் உத்தமமாகும். திதி தெரியாவிடின் அந்த மாத அமாவாசை அல்லது அட்டமியில் செய்யலாம். மாதம் தெரியாவிடின் ஆடி, மாசி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் அத்திதிகளில் செய்யலாம். இவைகளில் எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபக்க நாட்களில் செய்து கொள்ளலாம். (புரட்டாதி மாதத்து அபரபக்கத்துப் பிரதமைத் முதல் அமாவாசை வரையான காலம் மாளயபக்க காலமாகும்)

**தீர்த்த சிரார்த்தம்:-**

மாதந்தோறும் அமாவாசையில் பிதா மாதாக்களின் பொருட்டுச் செய்யப்படும் பிதிர் தேவர்களின் தாக சாந்திக் கருமம்.

அமாவாசை சூரிய கிரகணம், வியதீபாத யோகம், உத்தராயணம், சித்திரை வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, கார்த்திகை மாத சுக்கிலப்பக்க நவமீ, புரட்டாதி மாதக் கிருஷ்ண பக்கத் திரியோதிசி என்னும் இந் நாட்களில் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பிதிர் தர்ப்பணம் செய்து சிவனடியாரோட உண்ணல் தீர்த்த சிரார்த்தம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களுக்கு வீடு பேறு கொடுப்பதற்காகவும், புண்ணிய காலங்களிலே தென்புலத்தாரைக் குறித்துத் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களை பிறவிக் கடலினின்றும் கரையேற்றுவதற்காகவும் கருணாநிதியாகிய சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளார்.

**அமாவாசை சிரார்த்தம்:-**

மனிதர்களுடைய ஒரு மாதம் பிதிரர்களுக்கு ஒரு நாளாகும் (சுக்கில பக்கம் இரவும், கிருஷ்ண பக்கம் பகலுமாகும்) ஆதலால் மாதந்தோறும் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்து விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

**எள்ளும் தண்ணீரும் இறைத்தல்:-**

தருப்பணம் திருப்திக்காகச் செய்யப்படுவது தருப்பையைப் பிடித்து அத்தருப்பை மூலத்திலிருந்து எள்ளும் கலந்த நீரைச் சுட்டு விரல் மூலம் விழச் செய்யப்படுவாகும் இந்நேரம் தலைமுறையான பிதிர்களின் பெயர் சொல்லிச் செய்யப்படும் தருப்பண முடிவிலே, "என் குலப் பிதிர்களே, பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்.) என்று சொல்லித் தருப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும்.

**கயா சிரார்த்தம்:-**

கயா காசியில் உள்ள தீர்த்தம்.இதில் பிதிர்களை எண்ணிச் சிரார்த்தம் செய்யின் வேறு சிரார்த்தம் செய்யவேண்டியதில்லை என ஞான நூல்கள் கூறுகின்றன. இச்சிரார்த்தம் பிதிர்களுக்கு திருப்தியைக் கொடுப்பதுடன், போக மோட்சங்களையும் கொடுக்கும் கயா சிரார்த்தத்தால் ஏழு கோத்திரத்திலுள்ள நூற்றொரு குலமும் விருத்தியாகும். இப்படியான வேறும் பல புண்ணி தீர்த்தங்கள் சிரார்த்தம் செய்வதற்கு உண்டு. அவை அயோத்தி, மதுரை, மாயை, காஞ்சி, அவந்தி, துவாரகை,திருக்கேதீச்சரம், திருகோணமலை, கன்னியா நீரூற்றுக்கள், கீரிமலை, முன்னேஸ்வரம் போன்றவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரார்த்தம் செய்யும் இடம்:-**

இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக் கோயில்,புண்ணிய தீர்த்தக் கரை, குருவின் மனை போன்ற கோமயத்தினால் சுத்தி செய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

**சிரார்த்தத்துக்குரிய பொருட்கள்:-**

எள், நெல்லரிசி, கோதுமை, சிறு பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசு நெய், பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக் காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சி கிழங்கு, வாழையிலை, வாழைத் தண்டு, வாழைக் காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம் பழும், நெல்லிக் காய், சிறு கிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

**சிரார்த்தத்திற்கு ஆகாத பொருட்கள்:-**

கடலை,பீர்க்கங்காய்,நீற்றுப் பூசணிக்காய்,முருங்கைக்காய் அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப் பூண்டு, கொல்லை, எருமைப் பால், எருமைத் தயிர் முதலியன.

**பொருள் இல்லாதவர் சிரார்த்தம்:-**

சிரார்த்தத்திற்கு பொருள் இல்லாதவர் காய்கனி, கிழங்கு, எள்ளு இவைகளையேனும் சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரம் செய்து திலதருப்பணம் கொடுத்துப் பிரதட்சணை நமஸ்காரம் செய்து திலதருப்பணம் பண்ணித் தான் திருப்தியாக உணவு செய்தல் வேண்டும். தருப்பணம் செய்வதற்கும் வல்லமை இல்லாதிருப்பின் பசுக் கூட்டங்களுக்குப் புல்லைக் கொடுத்தல் மேலானது.

**சிரார்த்தத்திற்கு உபயோகிக்கும் பத்திரம் - மலர்:-**

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவத்தை. எட்பூ. மருக்கொழுந்து. வெட்டிவேர் முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரார்த்தத்திற்கு ஆகாதவை:-**

மகிழம் பூ, தாழம் பூ, அலரிப் பூ, சிறுசண்பகப் பூ முதலியன.

**சிரார்த்த தினத்தில் செய்யத் தகாதன:-**

தயிர் கடைதல், நெல் குத்துதல், நெய் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

**சிரார்த்தம் கொடுக்கத்தக்க பாத்திரர்:-**

வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டு கடவுளை மெய்யன்போடு வழிபடுபவரும் தம்மைப் போலவே பிறரும் நன்நெறியில் நின்று உய்ய வேண்டுமென்று எண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்பவருமானோர் சற்பாத்திரராவர். அசற்பாத்திரர்க்குச் சிரார்த்தம் கொடுத்தலாகாது வேத சிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும் பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிரார்த்ததிலே அன்புடன் கொடுத்தவைகளை திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளாதவருமானோர் அசற்பாத்திரராவர். இவர்களுக்கு சிரார்த்தம் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

**சிரார்த்தம் நடைபெறும் போது செய்யத்தக்கன:-**

வேதபாராயணம் செய்தல், தமிழ் வேதங்களையும் புராணங்களையும் ஓதுதல், இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தியானவையாம்.

**உபசாரம்:-**

சிரார்த்தம் முடிவில் ஆசாரியருக்கு உபசாரம் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரம் செய்யும் போது அது ஆசாரியருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர் தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரார்த்த காலம்:-**

இராக்காலத்திலும் சூரியோதயம் முதல் ஆறு நாழிகை வரையுள்ள காலப் பொழுதிலும் இராக்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் பகற் காலத்தில் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு சந்தியா காலமும் தவிர்த்து ஏனைய நேரங்கள் பிதிர் சிரார்த்தத்திற்கு உரியனவாகும்.

**உணவு:-**

சிரார்த்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும், பார்வதி அம்மையும், முருகக் கடவுளும், திருமாலும், பிரமாவும் தரும தேவதையுமாகிய சகலரும் கூடி அதிதி வடிவாய் வருவரென்று செய்நூல்கள் கூறுகின்றன.

## நீத்தார் கடன்

அவிட்டதிற்கு 6 மாதம், சதயத்திற்கு 3 மாதம், பூரட்டாதிக்கு $1\frac{1}{2}$ மாதமும், உத்தரட்டாதிக்கு 1 மாதமும், ரேவதிக்கு 15 நாட்களும் தனிஷ்ட பஞ்சமி குற்றமாம். இந்த நட்சத்திரங்களில் மரணித்தால் தனிஷ்ட பஞ்சமி சாந்தி செய்யிற் தோசமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண வீட்டில் அபரக் கிரியைகளைச்செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்

**இந்நாளில் கிரியை செய்யும் போது சைவக் குருக்களே இவற்றைக்கொண்டு வருவார்**

நெல்லு
பச்சை அரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய்
தேங்காய்யெண்ணெய்
விபூதி
சந்தனம்
குங்குமம்
அபிஷேகக் கூட்டு
மஞ்சள் மா
அபிஷேகத் திரவியம்
பன்னீர்
தேன்
நல்லெண்ணெய்
அரப்பு
லவரந்தர்
அத்தர்
ஊதுபத்தி
சாம்பிராணி
தசாங்கம்
நெற்பொரி
நவதானியம்
கழிநூல் பந்து
பஞ்சவர்ண நூல்
விளைவு கூடம்
சமித்துக் கட்டு
பட்டுத் துண்டு

குருக்கள் வேட்டி, சால்லை
கும்பவேட்டி 1
முட்டி 2
சட்டி 2
செம்பு 13
குடம் 1
குத்துவிளக்கு
உரல், உலக்கை
அறுகம்புல்
மாவிலை, வாழையிலை
கோசலம், கோமயம்
பால், இளநீர்
மான் தோல்
தட்டம்
வேட்டி, சால்வை(கிரியை செய்வோருக்கு)நெய்
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
பழவகைகள்
பாக்கு
வெற்றிலை
(இறந்தவருக்கு)
வேட்டி, சால்வை
அல்லது
சேலை, சட்டை
கத்தி
தோரணம், கயிறு
தீப்பெட்டி
6m வெள்ளைத் துணி(கோடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்தி சஞ்சயன் போது கொண்டு செல்பவை

அரிசி மாவை பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போகவேண்டும் அதோடு பால், தயிர், மண்வெட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவத்தி, பழவகை, பாக்கு, வெற்றிலை பூஜைக்குரிய பொருட்கள்.

## அந்தியேஷ்டிக் கிரியைக்குத் தேவையான பொருட்கள்

நெல்லு
பச்சை அரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய்-02
கழிநூல் பந்து
பஞ்சவர்ண நூல்
விபூதி
குங்குமம்
சந்தனம்
பன்னீர்
அபிஷேகக் கூட்டு
அபிஷேகத் திரவியம்
நவதானியம்
நெற்பொரி
நெய்
சமித்துக் கட்டு
விளைவு கூடம்
சாம்பிராணி
அரிசி மா
மஞ்சள் மா
நல்லெண்ணெய்
அரப்பு
குருக்கள் வேட்டி சால்வை
கும்பவேட்டி

வெற்றிலை
பாக்கு
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
பழவகைகள்
அறுகம்புல்
பால், தயிர்
கோசலம், கோமயம்
இளநீர்
மாவிலை
வாழையிலை
முட்டி 2
சட்டி 1
உரல், உலக்கை
தேங்காய் எண்ணெய்
சில்லறைக் காசு
செம்பு 12
குடம் 1
குத்துவிளக்கு
தட்டம்
மான் தோல்
பூ, மாலைகள், சுரப்பந்து
அமுது
பலகார வகைகள்
1 படி பச்சை அரிசி பொங்கல்
3 படி அரிசியில் சோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகர்க்கு"

என்னும்

வள்ளுவன் வாக்கின் படி
எம்மை எல்லாம் நீங்காத் துயரில்
ஆழ்த்தி விட்டு எம்மை விட்டு
பிரிந்து சென்ற எமது குடும்பத்தின்
குடும்ப விளக்கு என ஒளி வீசிய
எம் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி
கேட்டு ஓடோடி வந்து பல் வேறு வழிகளிலும்
உதவிய உற்றார்,உறவினர்,நண்பர்கள்,
அயலவர்கள் அனைவருக்கும் நேரிலும்
தொலைபேசியிலும் அனுதாங்கள் தெரிவித்தோருக்கும்
கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும்,உடல் நோய்வாய்ப் பட்டு இருந்த வேளை அன்புடன் சேவையாற்றிய வைத்திய நிபுணர்களுக்கும்,தாதியர்க்கும் எம் இதய நன்றிகளையும்
மற்றும் இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,கிரியைகளை சிறப்பாக
நடாத்திய அந்தண சிவாச்சாரியார்களுக்கும்
இம் மலரை அழகுற அச்சேற்றித் தந்த
றோயல் பதிப்பகத்தாருக்கும் எமது உணர்வு பூர்வமான
***நன்றிகளைத்*** தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல:531, ஒட்டங்குளம்,**
**பொன்னகர்.**




**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்


## வைத்தியர் பரம்பரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இக்குறியீடு அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்குப் போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடன் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.



" நன்நெறியே இறைவணக்கம் "

– சுவாமி விவேகானந்தர் –

றோயல் பதிப்பகம், மல்லாவி. 077 451 7447

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org